WIKIPEDIA

# கண்டம்

**கண்டம்** ( ஒலிப்பு (உதவி·தகவல்)) (*Continent*) எனப்படுவது தொடர்ச்சியான மிகப்பெரிய நிலப்பரப்பைக் குறிக்கும். புவி ஏழு கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை எந்தவொரு குறிப்பிட்ட காரணங்களால் அன்றி மரபுசார்ந்தே அடையாளப்படுத்தபடுகின்றன. மிகப் பெரியதிலிருந்து சிறியதாக

ஒவ்வொரு கண்டமும் தனித்த நிலப்பகுதியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை கோட்பாட்டிலிருந்து பொதுவாகத் தன்னிச்சையான, வரலாற்று மரபுகளால் விலக்கங்கள் ஏற்பட்டுள்ளன. ஏழு கண்டங்களில் ஆத்திரேலியாவும் அன்டார்க்டிக்காவும் மட்டுமே மற்ற கண்டங்களிலிருந்து தனித்து உள்ளன.

பல கண்டங்கள் முற்றிலும் தனித்த பகுதிகளாக வரையறுக்கப்படவில்லை; "

அனைத்துப்பரப்பையும் கண்டங்களாகவும் கண்டம் போன்ற நிலத்தொகுதிகளாகவும் பிரிக்க வழி செய்கிறது.[10]

## கண்டங்கள் பிரிப்பு



*தீவு நாடுகளின் நிலப்படம்: இந்த நாடுகள் பெரும்பாலும் புவியியல்படி அடுத்துள்ள கண்ட நிலப்பகுதிகளுடன் சேர்க்கப்படுகின்றன.*

## கண்டங்களின் பரப்புக்கள்

*கண்டம்* என்பதன் குறுகிய பொருளாகத் தொடர்ச்சியான[6] நிலப்பரப்பாக அல்லது பெருநிலப்பகுதியாக கொள்ளலாம்; கண்டத்தின் எல்லைகளாகக் கடற்கரைகளும் நில எல்லைகளும் அமைந்தன. இந்தக் கோட்பாட்டின்படி *ஐரோப்பிய கண்டம்* (சிலநேரங்களில் "தி காண்டினெட்") என்பது ஐரோப்பிய பெருநிலப்பகுதியைக் குறிப்பிடுவதாக அமைந்தது; இதில்

நிலப்பகுதிகள் ஒரே தொடர்ச்சியான உலகப் பெருங்கடலால் சூழப்பட்டிருக்க இதுவும் பல பெருங்கடல்களாகக் கண்டங்களாலும் பிற புவியியல் அளவீடுகளாலும் பிரிக்கப்பட்டுள்ளது.[3][4] கண்டங்கள் சிலநேரங்களில் முதன்மை நிலப்பரப்புகளிலிருந்தும் விரிவுபடுத்தப்பட்டு உலகின் அனைத்து நிலப்பகுதிகளும் ஏதேனும் ஒரு கண்டத்தின் அங்கமாகக் கொள்ளப்படுகிறது.[5]

அளவுகோள் தன்னிச்சையான வகைப்பாடாகும்: 2,166,086 சதுர கிலோமீட்டர்கள் (836,330 sq mi) புறப்பரப்பளவுள்ள கிறீன்லாந்து உலகின் மிகப்பெரும் தீவாகக் கருதப்படுகிறது; ஆனால் 7,617,930 சதுர கிலோமீட்டர்கள் (2,941,300 sq mi) புவிப்பரப்பளவுள்ள ஆத்திரேலியா ஓர் கண்டமாகக் கருதப்படுகிறது. அதேபோல, தொடர்ச்சியாக இருக்க வேண்டும் என்ற அளவுகோலும் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டு கண்டத் திட்டுகளும் பெருங்கடல் தீவுகளும்

துறையே தட்டுப் புவிப்பொறைக் கட்டமைப்பு கல்வியாகும்.

## வரையறைகளும் செயல்பாடுகளும்

மரபுப்படி, "கண்டங்கள் பெரும் நீர்பரப்புகளால் பிரிக்கப்பட்ட, பெரிய, தொடர்ச்சியான, தனித்த நிலத்தொகுதிகளாகும்."[2] பொதுவாக மரபுப்படி அறியப்படும் ஏழு கண்டங்கள் அனைத்துமே நீர்பரப்புகளால் பிரிக்கப்பட்ட தனித்த நிலப்பரப்புகள் அல்ல. "பெரிய" என்ற

*வண்ணங்களில்) பிரிக்கப்பட, சில நேரங்களில் வட தென் அமெரிக்கா கண்டங்களை ஒன்றிணைத்து ஒரே*

*அமெரிக்கக் கண்டமாக கொள்வதுண்டு (பச்சை வண்ணங்கள்).*

நிலவியல் படிப்பில் கண்டங்கள் தட்டுப் புவிப்பொறைக் கட்டமைப்புகள் மூலமாக விவரிக்கப்படுகின்றன. முன்னதாகக் கண்டப்பெயர்ச்சி என அறியப்பட்ட கண்டங்களின் நகர்வுகளையும் மோதல்களையும் பிரிகைகளையும் ஆய்வுறும்

இவை: ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அன்டார்க்டிக்கா, ஐரோப்பா, மற்றும் ஆஸ்திரேலியா ஆகும்.[1]




*அசைபடமாக, வண்ணக் குறிகளிட்டு காலவோட்டத்தில் கண்டங்களைப் பிரிக்கும் முறைகள் காட்டப்பட்டுள்ளன. மரபுகளையும் முறைமையையும் பொறுத்து, சில கண்டங்கள் ஒருங்கிணைக்கப்படலாம் அல்லது பிரிக்கப்படலாம்: காட்டாக, ஐரோவாசியா பெரும்பாலும் ஐரோப்பா என்றும் ஆசியா என்றும் (சிவப்பு*